கூட்ட எண் 12 நகராட்சி அலுவலகம்,
2018 - 2019 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 14.12.2018.

2018-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14.12.2018.ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை - 5 அவர்களின் செயல்முறை கடிதத்தில் ஆரணி நகராட்சி புதிய குடிநீர் குழாய் வீட்டிணைப்புகள் 7427 எண்ணிக்கை வழங்க மதிப்பீடு ரூ. 250.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், TUFIDCO நிதி நிறுவனத்தின் 07.12.2018ந் தேதிய கடன் அனுமதி கடிதத்தில் ரூ.253.45 லட்சம் தொகையில் மேற்படி பணியினை மேற்கொள்ள வட்டியில்லா கடன் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இப்பணிக்கான விரிவான திட்ட மதிப்பீடு தற்போதுள்ள 2018-2019 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செந்தர பட்டியலின் அடிப்படையில் ரூ.259.00 லட்சம் மதிப்பில் தயார் செய்யப்பட்டுள்ளது மேலும், TUFIDCO நிதி நிறுவனத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட கடன் தொகை ரூ.253.45 லட்சம் தொகை போக கூடுதலாகும் ரூ.5.55 லட்சம் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், அதற்கான உரிய தொழில் நுட்ப அனுமதி பெற மேலனுப்பி வைக்கவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1.மன்றம் அனுமதி அளிக்கலாம், 2. மேலும், TUFIDCO நிதி நிறுவனத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட கடன் தொகை ரூ.253.45 லட்சம் தொகை போக கூடுதலாகும் ரூ.5.55 லட்சம் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 139 /2018 /இ1).

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.

கூட்ட எண் 13
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 31.12.2018.

2018-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31.12.2018.ந் தேதி திங்கட் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு அலுவலர் பணியிடம்-1 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் -5 ஆகியவை காலியாக இருப்பதால், பொது சுகாதாரப் பணிகள் பாதிக்கப்படுகின்றன.அதனால், அரசாணை (நிலை) எண் 170 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்18.12.2009-ன்படி இந்நகராட்சியில் துப்புரவு அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற துப்புரவு அலுவலர் திரு. N, இலட்சுமணன் அவர்களை தற்காலிக துப்புரவு அலுவலராக ஒரு வருடத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10000/- என்ற அடிப்படையில் பணிபுரிய பணியமர்த்தி கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 3297/2018/எச்1)

4. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வேலப்பாடி எருகிடங்கில் ஜனவரி - 2018 மாதத்தில் குப்பைகள் குவியல்களாக காணப்பட்டதை வாரி உயரப்படுத்தவும், சமன் செய்வதற்கும் வரப்பெற்ற விலைப்புள்ளி மற்றும் தோராய செலவினம் ரூ.50000/-க்கும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | ஒரு மணி நேரத்திற்கு |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீவிநாயகா எர்த் மூவர்ஸ், அப்பந்தாங்கல் | - | ரூ. 800/- |
| 2. | ஸ்ரீநல்லாத்தூர் அம்மன் எர்த் மூவர்ஸ், சங்கீதவாடி | - | ரூ. 950/- |

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீவிநாயகா எர்த் மூவர்ஸ், அப்பந்தாங்கல் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். 3. தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 2588/2014/எச்1)

5. ஆரணி நகராட்சி காந்தி சாலையில் ஒரு தொகுதிக்கு (Block) 24 கடைகள் வீதம் 6 தொகுதிகளில் 144 காய்கறி சந்தைக் கடைகள் IDSMT திட்டத்தின் கீழ் ரூ. 1.23 கோடி மதிப்பீட்டில் 1985 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. 01.06.2018 அன்று ஆரணியில் கனமழை பெய்த போது, இந்த சந்தை வளாகக் கடைகளில் 3 கடைகளின் மேற்கூரை இடிந்து விழுந்தது. இதை தொடர்ந்து ஆரணி நகராட்சி பொறியாளர் காந்தி சாலை காய்கறி சந்தைக் கடைகளை ஆய்வு செய்ததில், இந்த வளாகத்தில் உள்ள 144 கடைகளும் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளன என தனது 20.06.2018 ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். ஆரணி நகராட்சி காந்தி சாலையில் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள காய்கறி சந்தை வளாகத்தில் உள்ள 144 கடைகளை இடித்து விட்டு புதியதாக 127 காய்கறி சந்தை வளாகக கடைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்த நிர்வாக அனுமதி வழங்க கோரி கருத்துரு சமர்ப்பிக்க இந் நகர மன்றத் தீர்மானத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின் பேரில், ரூ.2.37 கோடி மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ அரசு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்குமாறு கருத்துரு சமர்பிக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -5 அவர்களின் கடிதத்தில், இப்பொருள் தொடர்பாக எந்த ஒரு திட்டத்தின் கீழும் தற்போது அரசு மான்யம் வழங்க வழிவகை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணியினை தனியார் மற்றும் பொது மக்கள் பங்களிப்புடன் கூடிய முறையில் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி,இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் மேற்கொள்ள இப்பணிக்கான “Expression of Interest கோர அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதிக்காக தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1564/2018/இ1)

6. ஆரணி நகராட்சி வார்டு எண் 20 மற்றும் 21 ஆகிய பகுதிகளில் உள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக வால்வு தொட்டிக்கு சிமெண்ட்டிலான மூடி 2 எண்ணிக்கை அமைக்கப்பட வேண்டியுள்ளதால், அதற்காகும் உத்தேச தோராய செலவினம் ரூ.30000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

7. ஆரணி நகராட்சி பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சியில் பெறப்படும் கழிவுகளை நுண்ணுயிரி உரமாக்கும் திட்டத்தின் கீழ் 1) அலுவலக வளாக அருகில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டி வளாகம். 2) ஆரணி கமண்டல நாகநதி நீர்இறைவை நிலைய வளாகம். 3) வார்டு எண் 1ல் உள்ள நவீன எரிவாயு தகன மேடை வளாகம் போன்ற இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எருகிடங்கினை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி மாண்புமிகு இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் திறப்பு விழா செய்வதால், திறப்பு விழாவிற்கு அலங்கார தோரணம், பந்தல், வண்ண விளக்குகள், ஒலிபெருக்கி மற்றும் பார்வையாளர்கள் அமர சேர் வசதி ஆகியவை செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.20000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

8. ஆரணி நகராட்சியில் இயங்கி வந்த தினசரி காய்கறி அங்காடி பழுது ஏற்பட்டதை முன்னிட்டு புதியதாக கட்டுமானம் செய்திட வேண்டி தற்காலிக ஏற்பாடாக ஆரணி நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைத்திட தனியாக இரும்பிலான கேட், மற்றும் அலவலகத்திலிருந்து நீர்த் தேக்கத் தொட்டிற்கு செல்லும் வழியில் நீர்த் தேக்கத் தொட்டி பாதுகாப்பு கருதி செங்கற்கலான தடுப்பு சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.25 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், பணியின் அவசியத்தை கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண் 761/2018/இ1)

9. ஆரணி நகராட்சியில் பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் வளாகம் நீர்த் தேக்கத் தொட்டியின் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கு வாகனங்கள் குப்பையை எடுத்துச் செல்ல ஏதுவாக புதியதாக இரும்பு கேட் அமைக்கவும், கால்வாயின் குறுக்கே சிறுபாலம், மற்றும் போக்குவரத்திற்கென சாலை அமைத்திடவும், மேலும், அவ்விடத்தில் உள்ள சிறுமின்விசை பம்பிற்கு பாதுகாப்பு செய்திட தொட்டி மற்றும் சிமெண்டிலான மூடு பலகை அமைத்தல் ஆகிய பணிகள் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். மேலும், பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

10. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில் சுகாதாரப் பணிகளுக்காக பயன்பாட்டில் இருந்து வரும் வாகனம் எண் TN25BY7803 மினி டிப்பர் லாரி கடந்த 29,11,2018 அன்று குப்பைகளை ஏற்றிக் கொண்டு வேலப்பாடி எருகிடங்கில் டிப்பர் மூலமாக தள்ளும் போது வாகனத்தில் உள்ள டிப்பரின் ஹைட்ராலிக் பிஸ்டன் திடிரென பழுதாகி லாரியுடன் குப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது இதனால் வாகனம் முழுவதும் சேதம் ஏற்பட்டு இயக்க முடியாமல் உள்ளது. எனவே, மேற்படி வாகனத்தை கொள்முதல் செய்த நிறுவனத்தில் விட்டு பழுதினை சரி செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில், அந்நிறுவனத்தின் விலைப்புள்ளி வரப் பெற்றுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. அதற்கான உத்தேச தோராய செலவினம் ரூ. 254000/--க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணி மேற்கொள்ள வாகனம் கொள்முதல் செய்த நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

11. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மதிப்பீடு ரூ.27.00 இலட்சத்தில் குப்பை சேகரம் செய்வதற்கான (**Battary Oparated Vehicle)** மின்கலனால் இயங்க கூடிய வண்டி 15 எண்ணிக்கை விநியோகம் செய்தல் பணிக்கு 12.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இணையதளம் மூலம், மற்றும் பெட்டி வாயிலாக ஆறு (Online and Offline) நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்துள்ள நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி குறித்த உறை பிரிக்கப்பட்டு தொழில் நுட்ப பரிந்துரைக் குழுவின் பரிசீலனைக்க உட்படுத்தப்பட்டதில், கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள், ஒப்பந்த நமுனாவில் குறிப்பிட்டிருந்த தொழில்நுட்ப தகுதி குறித்த அனைத்து இனங்களிலும், தகுதியுடையவராகிறார் என குழுவின் ஒப்பு நோக்கு பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் பேரில் தொழில் நுட்ப தகுதியின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற இரண்டு நிறுவனங்களின் விலைவிகிதம் அடங்கிய உறையினை 05.12.2018 அன்று மாலை 3.00 மணியளவில் பிரிக்கப்பட்டது. அதன் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | வழங்கப்பட்ட விலை விகிதம் ரூ. | வழங்கப்பட்ட விலை விகிதம் சதவிகித்தில் |
|---|---|---|---|---|
| 1 | M/s ENCON Engineers, Coimbatore - 41 | 27.00 | 2692500/- | 0.28%குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | M/s Priyam Industries and Engineering PVT Ltd, Chennai - 600 006 | | 2698500/- | 0.06%குறைவு |

அலுவலக குறிப்பு :- மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பு நோக்கு பட்டியலின் அடிப்படையில் மதிப்பீட்டை விட 0.28% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s ENCON Engineers, Coimbatore - 41 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 999/இ1/2016)

12. ஆரணி நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பைகளில் காய்கறி கழிவுகள், உணவு கழிவுகள் மற்றும் மக்கும் தன்மையுள்ள குப்பைகளை நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் பொருட்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 5 எண்ணிக்கை MCC க்களில் எடுத்து சென்று கையாளப்பட உள்ளது. மேற்படி மக்கும் தன்மையுள்ள குப்பைகள் தவிர்த்து ஏற்படும் கழிவுகளை தரம் பிரித்து பயன்பாடிற்கு ஏற்றவாறு கையாளுவதற்கு போதிய இடவசதி இல்லாததால், இந்நகரில் பயன்பாடற்ற நிலையில் உள்ள மாடு அடிக்கும் மைய வளாகத்தின் ஒரு பகுதியில் Resource Recovery Centre மைய கட்டுமானம் அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, மேற்படி மைய கட்டடம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.36.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்றத் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிய நிர்வாக அனுமதி பெற வேண்டி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வேலூர் அவர்கள் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களுக்கு கருத்துரு அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 999 / 2016 /இ1)

13. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு, இந்நகரில் புதியதாக திறக்கப்பட்டுள்ள MCC மையத்தில் நுண்ணுயிர் உரம் தயாரிக்க மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரிக்க திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள மல்லிகை சுயஉதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காக ஆகும் ஒரு வருடத்திற்கு தோராய செலவினம் ரூ.22,00,000 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். 3. மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்கள் நிர்ணயித்த தினசரி கூலியின்படி, ஊதியம் வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 3318/2018/எச்1)

14. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பணியின் பயன்பாட்டில் உள்ள வாகனம் TN25V4635-ன் கிளச் பிளேட் முழுவதும் பழுதடைந்த வாகனத்தை இயக்க முடியவில்லை. மேலும், சுகாதாரப் பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி உள்ளூர் அங்காடிகளில் விலைப்புள்ளி கோரியதில் மேற்குறிப்பிட்டுள்ள பழுது சரி செய்ய பின்வரும் நிறுவனங்கள் விலைப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் உத்தேச தோராய செலவினம் ரூ. 10000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

1. ஸ்ரீஅபிராமி மோட்டார் ஒர்க்ஸ், 126எ கார்த்திகேயன் ரோடு,ஆரணி - ரூ. 9750/-
2. ஸ்ரீவெங்கடேஸ்வரா ஆட்டோ மொபைல்ஸ், 32 ஆற்காடு ரோடு ஆரணி- ரூ.10200/-
3. ஸ்ரீபெருமாற் மோட்டார் ஒர்க்ஸ், O/A-1 விஸ்வேஸ்வரய்யா தெரு,ஆரணி ரூ.10600/-

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

15. இந்நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேடு செல்லும் வழியில் தரைதளத்தில் 10 கடைகள் மற்றும் முதல் தளத்தில் வணிக உபயோகமாக பயன்படுத்திக் கொள்ள 1 கடை ஆகிய இனங்களுக்கு முன் ஏலம் மூலம் பெறப்படும் பொறுப்பு தொகையில் கட்டடம் கட்டி குத்தகை உரிமம் பெற மேற்படி குத்தகை இனங்களை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமைக்கு இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் குறிப்பில் (நாள் 17.12.2018) சம்மந்தப்பட்ட இடத்தில் வருங்காலங்களில் தனியார் ஆக்கிரமிப்பு மற்றும் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படாமல் இருக்கவும்,அவ்விடத்தில் தரை தளத்தில் 10x9 என்ற அளவில் 10 கடைகளும் முதல் தளத்தில் 10x99 என்ற அளவில், வணிக உபயோகமாக பயன்படுத்தி கொள்ளவும் கடைகள் கட்டிக் கொள்ள மாதிரி வரைப்படம் வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து நகராட்சி உதவிபொறியாளர் குறிப்பில் (நாள் 20.12.2018) மேற்படி கட்டடம் கட்ட செலவினம் ரூ.25.00 லட்சம் மதிப்பீடு வழங்கியுள்ளார். மேலும், மேற்படி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரின் குறிப்பின்படி வருவாய் ஆய்வாளர் முன் ஏலம் கோர ஏலப் பொறுப்புத் தொகையினை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்ய குறிப்பு (நாள் 20.12.2018) வழங்கியுள்ளார். எனவே, ஏலப் பொறுப்புத் தொகையினை அங்கீகரித்து முன் ஏலம் கோர மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | ஏல விவரம் | ஏலப் பொறுப்பு தொகை ரூ. (ஒரு கடைக்கு) | சொத்து சான்றிதழ் ரூ. (01.01,2018க்கு பிறகு பெறப்பட்டிருக்க வேண்டும்) | தாசில்தாரிடமிருந்து சால்வன்சி பெறாதவர்கள் செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேடு கடைகள் தரைதளத்தில் 1முதல் 10 எண்ணிக்கை (ஒரு கடையின் அளவு - 10 x 9) | 300000 | 500000 | 500000 |
| 2 | நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேடு கடைகள் முதல் தளம் வணிக பயன்பாடு வளாகம் 1 (அளவு - 10 x 99) | 1000000 | 2000000 | 2000000 |

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்படி கடைகளுக்கு முன் ஏலம் கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 987/அ3/18)

16. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பணியின் பயன்பாட்டில் உள்ள பின்வரும் வாகனங்களின் வருடாந்திர ஆயுள் காப்பீடு 02.01.2019 மற்றும் 30.01.2019 ஆகிய தேதிகளில் நிறைவடைகிறது எனவும், அதற்கான தொகையினை செலுத்தி மேலும் ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்து கொள்ள தெரிவித்து யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் ஆரணி நிறுவனத்திடமிருந்து அறிவிப்பு வரப் பெற்றுள்ளது

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | TN25AZ1101 | டம்பர் பிளேசர் | 02.01.2019 | ரூ. 27165,00 |
| 2. | TN25V9461 | மினி ஆட்டோ | 30.01.2019 | ரூ. 17740,00 |
| 3. | TN25V9462 | மினி ஆட்டோ | 30.01.2019 | ரூ. 17740,00 |
| 4. | TN25V9463 | மினி ஆட்டோ | 30.01.2019 | ரூ. 17740,00 |
| 5. | TN25V9464 | மினி ஆட்டோ | 30.01.2019 | ரூ. 17740,00 |
| 6. | TN25V9465 | மினி ஆட்டோ | 30.01.2019 | ரூ. 17740,00 |
| 7. | TN25V4633 | மினி டிப்பர் லாரி | 30.01.2019 | ரூ. 20065,00 |
| 8. | TN25V4635 | மினி டிப்பர் லாரி | 30.01.2019 | ரூ. 19532,00 |
| | | | **மொத்தம்** | **ரூ.155462,00** |

. மேற்குறிப்பிட்டுள்ள வாகனங்களின் வருடாந்திர ஆயுள் காப்பீடு மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினம் ரூ. 155462/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.மேலும், மேற்படி, இன்சூரன்ஸ் தொகையினை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்திற்கு செலுத்த அனுமதி அளிக்கலாம்.(கோப்பு எண் 634/2016/இ1)

17. இந் நகராட்சியில் 338 குடிநீர் குழாய் இணைப்புகளின் கேட்பு அறிக்கை நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) மேற்படி குழாய் இணைப்புகளின் தன்மை அறிய உதவிப் பொறியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் நேரில் தளஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாய்வில் மேற்படி குடிநீர் குழாய் இணைப்புகள் அனைத்தும் நீண்ட காலமாக துண்டிப்பில் உள்ளது என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, நிலுவைத் தொகை ரூ.43,55,847/-யினை வசூலிக்க முடியாத நிலையில் உள்ளது. மேலும், தற்போது 338 குடிநீர் இணைப்புகளும் இல்லாத காரணத்தினால் மேற்படி தொகையை நிலுவைக் கேட்பிலிருந்து ரத்து செய்வதற்கு (RIGHTOFF) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம். 2. மேலும், தற்போது 338 குடிநீர் இணைப்புகளும் இல்லாத காரணத்தினால் மேற்படி தொகையை நிலுவைக் கேட்பிலிருந்து ரத்து செய்ய (RIGHTOFF) அனுமதிக்கலாம். (கோப்பு எண் 808/2018/அ2)

18. அரசாணை நிலை எண் 137 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MA.2) துறை நாள் 26.12.2018 திட்டப் பணிகள் ஒப்புதல் மற்றும் கண்கானிப்பு குழு கூட்ட நடவடிக்கைகள் நாள் 01.10.2018ல் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்ட குழுமம் (IUDM) 2018-2019ன் கீழ் மேற்குறிப்பிட்டுள்ள அரசாணை அட்டவனை 4ல் கண்டுள்ளவாறு இந் நகராட்சியில் சாலைப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.9,99,50,000/-க்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் (IUDM) பங்களிப்பில் முழுமான்யமாக வழங்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| Sl No. | Name of work / ULB<br>**Arani Municipality** | Length in KM | Width in M | Approved Cost Rs. In Lakh | IUDM Share in Lakh |
|---|---|---|---|---|---|
| 1 | Providing and Laying BR Surface with Storm water drain & Culvert at KCK nagar, Pudukamour road and Extension area, Jayamnagar. K.K. Nagar Extension & DRS Nagar and Providing and Laying BT Surface at Annai Sathiya nagar, Old Arcot road in ward No. 01 (Package 1) | 3.53 | 4 to 7.50 | 247 | 247.00 |
| 2 | Providing and Laying BT Surface at Thanikachalam Street to S.M.Road (Vanuvapillaiyar koil opp) in ward no. 07&08 Prasuraman Street in ward no. 08, narayanan Street in ward no. 10, Sabaskan Street in ward no. 13, Arunagirichatharam to Thachur road in ward no. 13,15,&23, Venkateswara Nagar back side road in ward no. 14, Palaniandavar Koil street in ward no. 16 and Samy Street in ward no. 22 (Package No.2) | 4.13 | 4 to 13 | 241.50 | 241.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | Providing and Laying BT Surface with Storm water drain & Culvert at Elango Street in ward No.23, VLD nagar in ward no. 24, Solai nagar in ward no. 25 and laying BT Surface at Suriyakulam south and west Street in ward no. 23 Bharathiyar Street in ward no. 24, Naickanpalayam & Malayampattu road, in ward no. 23 (Package No. 3) | 3.60 | 4 to 7 | 181 | 181.00 |
| 4 | Providing Cement Concrete Pavement with and Paver block pavement storm water drain, culvert at E.B.back side road. Kamarajar nagar, Anna nagar in ward no. 27, Pallikuda street Extension area in ward no. 28, and Provding Cement Concrete pavement at Indra nagar in ward no. 9 Nadagasalai Pettai Street back side ( Saraswathi nagar) in ward no. 26, Fort north street in ward no. 32 and Providing Paver block pavement with storm water drain at Fort alround both side, Foat North street at Old bus Stand both side in ward no. 32 (Package no. 4) | 3.28 | 4 to 5 | 150 | 150.00 |
| 5 | Providing and Laying BT Surface with Strom water drain & Culvert at Jayalakshmi nagar, MGR Nagar, in ward no. 30. And Providing and laying BT Surface at Mullipattu road and MGR Nagar, in ward no. 27, Judge vijayarangan Street, Pithcandi Nagar, Anbu Nagar back side in ward no. 29, VAK Nagar & Ragunathapuram road in ward no. 30 (Package No. 5) | 3.77 | 4 to 8.20 | 180 | 180.00 |
| | Total | | | | 999.50 |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ளவாறு, பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள விரிவான திட்ட மதிப்பீடுகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -5 அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று தொழில் நுட்ப அனுமதி பெற வேண்டி கருத்துருவினை மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வேலூர்-12 அவர்களின் மூலமாக மேலனுப்பவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம், மேலும், தயார் செய்யப்பட்டுள்ள விரிவான திட்ட மதிப்பீடு நிர்வாக அனுமதி, மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறும் பொருட்டு மேலனுப்பவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
(கோப்பு எண் 3531 / 2018 இ1)

19. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு - 33 வார்டுகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை MCC மையத்திற்கு கொண்டு செல்ல தற்போது போதுமான வாகனங்கள் இல்லாததால், சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளது. மேலும், டிப்பர் லாரி (ம) டாடா ACE வாகனங்கள் பழுது அடைந்து உள்ளதால், பழுது நீக்கம் செய்து பணிக்கு கொண்டு வரும் வரை 20 நாட்களுக்கு 2 டிராக்டர் (டிப்பர் மாடல்) தனியாரிடமிருந்த வாடகைக்கு எடுத்து பணிகள் செய்ய தனியார் டிராக்டர் உரிமையாளர்களிடமிருந்த விலைப்புள்ளிகள் பெற்றதையும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.1.20.000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| | | நாள் ஒன்றுக்கு வாடகை மற்றும் டீசல் செலவு |
|---|---|---|
| 1. | பார்த்தீபன், நெ.5/8 வீரக்கோயில் தெரு, குன்னத்தூர், ஆரணி தாலுக்கா | ரூ.3000/- |
| 2. | ஆறுமுகம் தருமராஜா கோவில் தெரு, அரியப்பாடி கிராமம், ஆரணி தாலுக்கா | ரூ.3650/- |

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பார்த்தீபன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கலாம். 3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 3419/2018/எச்1)

20. ஆரணி நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2018-2019ம் ஆண்டிற்கு சீருடை வாங்கி வழங்கவும், அதற்காக ஆகும் தோராய செலவினம் (தையற்கூலி உட்பட) ரூ.4.50.000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அரசு சார்புடைய நிறுவனமான SIDCOவில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 3480/2014/எச்1)

21. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி - 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 27.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் வருவாய் நிதி | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கூடுதல் அம்மா உணவகத்தில் கை அலம்பும் இடம், டோக்கன் வழங்கும் கேபின் மற்றும் மூன்று சக்கர மிதிவண்டி விநியோகம் செய்தல் | 1.00 | பி. சந்திரசேகர்<br>இ.இளங்கோவன் | 0.03 % குறைவு<br>0.50 % அதிகம் |
| 2 | வார்டு எண் 29 காந்தி நகர் முதல் தெருவில் உள்ள சிறுபாலம் பழுது சரி செய்தல் | 0.50 | எம்.பழனி<br>இ.இளங்கோவன் | 0.03 % குறைவு<br>0.70 % அதிகம் |
| 3 | வார்டு எண் 03 சாந்தா தெருவில் உள்ள 3 எண்ணிக்கை சிறுபாலங்கள் பழுது சரி செய்தல் | 0.60 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.05 % குறைவு<br>0.30 % அதிகம் |
| 4 | ஆரணி நகராட்சி நீர்த் தேக்கத் தொட்டி பின்புறம் புதியதாக அமைக்கப்பட்டுள்ள MCC க்கு இரும்பு கேட், சிமெண்ட தளம், சிறுபாலம், மற்றும் சிறுமின்விசை பம்பு பாதுகாப்பு கருதி சிமெண்ட்டிலான தொட்டி மற்றும் மூடு பலகை அமைத்தல் | 2.00 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.50 % குறைவு<br>0.70 % அதிகம் |
| 5 | ஆரணி நகராட்சி அலுவலக வளாகத்தில் தற்காலிமாக தினசரி காய்கறி அங்காடி கடைகள் வருவதையொட்டி நீர்த் தேக்கத் தொட்டியின் பாதுகாப்பினை கருதி தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் இம்பிலான கேட் அமைத்தல் | 2.25 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.03 % குறைவு<br>0.30 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

22. ஆரணி நகராட்சி முஸ்லீம் ஆரம்ப பள்ளி பென்ஷன் லைன் மசூதிக்கு சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு பிரதி மாத வாடகையாக ரூ.1200/- என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளத. மேற்காணும் கட்டடத்திற்கு அக்டோபர் 2017 முதல் டிசம்பர் 2018 வரையில் 15மாத வாடகை தொகை ரூ.18000/- (1200 X 18மா = 18000/-) வழங்கப்பட வேண்டும். மேற்காணும் வாடகை தொகை ரூ.18000/- நகராட்சி ஆரம்ப கல்வி நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 3906 / 2010 /சி2)

23. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தெருக்களில் வீடு வீடாக சென்று வீட்டில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கி வர பயன்படுத்தி வரும் மூன்று சக்கர தள்ளுவண்டிகளில் 25 எண்ணிக்கையில் முன்பக்க சக்கரங்கள், பின்பக்க சக்கரங்கள் பழுதடைந்து வண்டிகளை இயக்க முடியவில்லை. எனவே, பொது மக்களின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு உடனடியாக புதிய சக்கரங்கள் வாங்கி பொருத்திட ஆகும் செலவினம் ரூ. 96,950/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறத.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

24. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல்முறை கடிதம் எண் 31600/பி4/2018 நாள் 12.12.2018ல் ஆரணி நகராட்சி காந்தி சாலை அருகில் வார்டு சி. பிளாக் 7 சர்வே எண் 14ல் நகராட்சிக்கு சொந்தமான 2784.50 ச.மீட்டர் பரப்பளவில் புதியதாக 144 எண்ணிக்கையில் மதிப்பீடு ரூ.250.00 லட்சத்தில் காய்கறி மார்கெட் கட்டடம் கட்ட பின்வரும் முறைப்படி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

Construction of 144 Vegitable Shops in Arani Municipality. Tiruvannamalai District, Tamil Nadu under Design Build, Finance Oparate and Transfer (DBFOT) basis of Public Private Partnership (PPP) Mode) உரிய தொழில் நுட்ப ஆவணம் (Request for Proposal) தயார் செய்ய விலைப்புள்ளி கோரியதில், பின்வரும் நிறுவனங்கள் விலைப்புள்ளி வரப் பெற்றுள்ளது.

1. M/s AMRUTH INFRA ADVISORY SERVICES, Chennai - 41 Rs. 195000/-
2. M/s SREE DAMODAR CONSULTANCY SERVICES Chennai - 49 Rs. 250000/-

மேற்காணும் இரண்டு நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s AMRUTH INFRA ADVISORY SERVICES, Chennai - 41 நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அங்கீகரிக்கவும், அதற்கான உத்தேச தோராய செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பணியின் அவசியத்தை கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று M/s AMRUTH INFRA ADVISORY SERVICES, Chennai - 41 நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1564/2018/இ1)

25. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் வார்டுகளில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் வீடுவீடாக சென்று சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத என இனம் பிரித்து வாங்க பயன்படுத்தப்பட்டு வரும் பிளாஸ்டிக் உயர் தரம் கொண்ட பின்கள் பழுதடைந்துள்ளதால், அதனை பயன்படுத்த முடியவில்லை. எனவே, புதியதாக 50 எண்ணிக்கை சிகப்பு வண்ணத்திலும், 50 எண்ணிக்கை பச்சை வண்ணத்திலும் வாங்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1,25,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

26. ஆரணி நகராட்சி வார்டு எண் 33 பள்ளிக்கூடத் தெரு அமைக்கப்பட்டு இயங்கி வரும் சிறுமின்விசை பம்பின் HDPE டேங்க் மற்றும் டேங் அமைக்கப்பட்டுள்ள செங்கல் மேடை முழுவதும் பழுதடைந்து தண்ணீர் வீணாகிறது. மேலும், பொது மக்களுக்கு இடையூறாகவும் உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட இடத்தில் புதியதாக HDPE டேங்க் மற்றும் செங்கல் மேடை ஆகியவை அமைக்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 30000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கு நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.மேற்படி, செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

27. ஆரணி நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் நகராட்சியால் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது தெருவிளக்குகள் மற்றும் அதனை சார்ந்த மின்உபகரணங்கள் இருப்பு இல்லாத காரணத்தால், பொது மக்களால் தெரிவிக்கப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் தெருவிளக்குகள் அமைக்க வேண்டியுள்ளது. மேலும், தற்போது தமிழர் பண்டிகை பொங்கல் விழாவாக உள்ளதாலும், பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு தெருவிளக்குகள் மற்றும் மின் உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

28. **ஆரணி நகரப் பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான பொது பயன்பாட்டிற்கான இடங்கள், பூங்காக்கள் மற்றும் சுடுகாடு முதலிய இடங்களை தெரிவு செய்து** Micro Composting **முறையில் அறிவியல் ரீதியாக அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரமாக்க நடவடிக்கை மேற்கொள்ள** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை - 5 அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண் 29659/ப்பி3/2016 நாள் 23.03.2018ல் **திருத்திய நிர்வாக அனுமதி வழக்கப்பட்டதின்பேரில், பின்வரும் இடத்தில் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்ப்பட்டு, பணி நடைமுறைபடுத்தப்படும்போது அப்பகுதியில் உள்ள பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்தால், அவ்விடத்திற்கு பதிலாக கீழ்கண்ட விவரப்படி பணிகள் இடம் மாற்றி செய்ய வேண்டியுள்ளது.**

| **வ.எண்** | **பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய இடம்** | **பணிகள் மாற்றம் செய்ய வேண்டிய இடம்** |
|---|---|---|
| 1 | **வார்டு எண்** 29 **நகராட்சிக்கு சொந்தமான காந்தி நகர் பூங்கா** | **நகராட்சிக்கு சொந்தமான மாடு அடிக்கும் வளாகம்** |

எனவே, மேற்படி பணிகளை ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் பணிகள் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனமதி அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகள் இடம் மாற்றி செய்வதற்கு திருந்திய நிர்வாக அனுமதி வழங்க கோரி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வேலூர் 12 அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றம் அனுமதி அளிக்காலம். (கோப்பு எண் 999 /2016/இ1)

29. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பயன்பாட்டில் இருந்து வரும் TN25AX6476 டம்பர் பிளேசர் வாகனம் 30.08.2012ல் வாங்கப்பட்டு இதுநாள் வரையில் பயன்பாட்டில் உள்ளது. இவ்வாகனத்தின் டயர்கள் 6எண்ணிக்கை மிகவும் தேய்மானம் அடைந்து டயர்கள் அடிக்கடி பஞ்சர் ஆகிவிடுகிறது. இதனால், பணியினை சரிவர செய்ய இயலவில்லை. எனவே, மேற்படி வாகனத்தின் டயர்கள் 6 எண்ணிக்கை புதியதாக வாங்க அரசு அங்கீகாரம்

பெற்ற CHEYYAR AGRO ENGG AND SERVICE CO-OP. CENTRE LTD. VC-9 என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரியதில் ரூ.62000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள வாகனத்திற்கு புதியதாக 6 எண்ணிக்கை டயர்கள் வாங்க ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.